**நாமல்ஓயா பிரதேச சபை**
**அம்பாறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 27 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கையும், விரிவான முகாமைத்துவ அறிக்கையும் 2020 யூலை 13 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நாமல்ஓயா பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 85,490 தொகையான நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2020 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | மீளாய்வாண்டில் மேலதிக நேரம் மற்றும் பிரயாணச் செலவினமாக செலவிடப்பட்ட ரூபா 37,952 தொகைக்காக கணக்குகளில் பொது வழங்கல் கடன்கொடுத்தோர் ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2020 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | 2018 ஆம் ஆண்டில் பொருள் மெய்மெய்யாய்வு சபை பரிந்துரையின் அடிப்படையில் அகற்றப்பட்ட தளபாடம், பொருத்திகள் மற்றும் இயந்திர உபகரணங்களின் பெறுமதி ரூபா 115,128 நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iv) | மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட்ட 09 அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக செலுத்த வேண்டிய ரூபா 9,882,628 தொகைக்காக கணக்குகளில் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2020 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (v) | 2018 மற்றும் 2019 ஆம் ஆணடுகளில் நிறைவேற்றப்பட்ட 09 அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக கிடைக்க வேண்டிய ரூபா 10,418,560 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2020 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (vi) | 2014 முதல் 2018 வரையான ஆண்டுகளுக்கு உரியதாக கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 40,400 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (vii) | மீளாய்வாண்டின் செம்தெம்பர் முதல் திசெம்பர் வரை கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (viii) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 588,953 தொகையான கூட்டுப் பசளை ஹலர் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் 05 கணக்கு விடயங்களின் பெறுமதிக்கும் அதற்குரிய புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளின் பெறுமதிக்கும் இடையே ரூபா 84,922,645 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இணக்கம் செய்யப்படாத கணக்குகளை ஏற்றுக் கொள்கின்றோம். 2020 ஆம் ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 180,551,018 தொகையான 05 சொத்து விடயங்கள் மற்றும் ரூபா 1,318,836 தொகையான 03 பொறுப்பு விடயங்கள் என்பவற்றிற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின் ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | தற்போது பதிவேடுகள் நாளது வரையாக்கப்படுகின்றமையி னால் எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாமைக்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.4 இணங்காமைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவு | கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பாக உப விதிகள் விதித்து உரிய செலவினங்களை தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபை அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | உப விதிகள் தயாரிக்கப்பட்டு மாகாண சபைக்கும் ஆளுநருக்கும் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டிருந்த போதும், இது வரை அவை அங்கீகரிக்கப்பட்டிருக் கவில்லை. |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் விதி (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 217 | பிரதேச சபைக்கு சொந்தமான மற்றும் பிரதேச சபையினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற காணிகளை கையேற்று மதிப்பீட்டு பெறுமதி நிலையான சொத்து பதிவேட்டில் உள்ளடக்கப்படவில்லை. | பிரதேச சபை விதி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காணிகளை கையேற்றதன் பின்னர் மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (இ) | அரச நிர்வாக சுற்றறிக்கை | | | |
| (i) | 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கை | உத்தியோகத்தர்களின் வரவுகள் மற்றும் வெளிச் செல்கைகளை பதிவிடுவதற்காக கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கவி ல்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிறுவனத்தின் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் எதிர்காலத்தில் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான 07 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவ ில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் எரிபொருள் எரிவு பரிசோதனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2015 ஒக்தோபர் 10 ஆம் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை. | செயற்பாடற்ற நிலையில் காணப்பட்ட 04 வாகனங்களை விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த வாகனங்களை விற்றுத் தீர்ப்பதற்கு, வாகனங்களின் உரித்தை சபைக்கு கையளிப்பதற்கு ஏற்பட்ட தாமதம் என்பதை குறிப்பிட்டுக் கொள்கின்றோம். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,595,526 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 612,895 ஆக இருந்தது.

**2.2 நிதிக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 03 வங்கிக் கணக்குகளுடன் தொடர்பான பல ஆண்டுகளாக வருமானத்திற்கு எடுக்கப்பட்ட ஆனால் வங்கியில் செலுத்தப்படாத ரூபா 29,335 தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சபையினால் வருமானமாக எடுக்கப்பட்ட ஆனால் வங்கியில் தேறாத தொகை தொடர்பில் தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வங்கிக் கணக்குகளில் இருந்து இந்த பணத்தை திரும்பப் பெற உள்ளூராட்சி ஆணையர் மூலமாக கௌரவ ஆளுநரின் ஒப்புதலுடன் அவர்கள் அனுப்பப்பட்டுள்ளது என்பதை நான் உங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன், ஒப்புதல் கிடைத்தவுடன் அவை அகற்றப்படும். |

**2.3 வருமான நிர்வாகம்**

**2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 304,500 | 84,500 | 84,500 | -- | 270,000 | 66,000 | 66,000 | -- |
| (ii) | வாடகை | 2,408,600 | 1,967,487 | 1,959,918 | 30,608 | 2,438,600 | 2336,012 | 2,353,833 | 23,039 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 422,000 | 525080 | 525,080 | 22,505 | 372,000 | 712,590 | 712,590 | 22,505 |
| (iv) | ஏனைய வருமானம் | 2,121,000 | 2,861,805 | 3,058,074 | 217,698 | 2,013,006 | 2644,399 | 2,552,486 | 413,967 |
| | | 5,256,100 | 5,438,872 | 5,627,572 | 270,811 | 5,093,606 | 5,759,001 | 5,684,909 | 459,511 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் பிரதான 30 பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 இம் திகதி வரையில் உப விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகள் விதிக்கப்படாத பணிகளுக்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டும். | 05 பிரதான பணிகளுக்காக உபதிகள் தயாரிக்கப்பட்டு மாகாண சபைக்கு அனுப்பப்பட்டிருந்த போதும், இது வரையிலும் அதற்கான அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெக்கோ இயந்திரத்தின் பின் பக்க கண்ணாடிக்கு ஏற்பட்ட பாதிப்பு தொடர்பாக நிதிப் பிரமாணம் 104(4) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நாளாந்த சம்பள அடிப்படையில் சேர்க்கப்பட்ட சாரதியினால் இந்த நட்டம் ஏற்பட்டமையினால் அறவிடல் தொடர்பான பிரச்சினை ஏற்பட்டிருந்ததுடன், எதிர்காலத்தில் அவரை அழைத்து இதனை பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) ஊழியர் வெற்றிடம் மற்றும் மிகை** | | |
| (i) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணியினரில் 04 பதவிகளுக்காக 05 வெற்றிடங்கள் காணப்பட்டன. | பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். | வெற்றிடங்களை நிரப்புதல் தொடர்பான நடவடிக்கை உள்ளுராட்சி ஆணையாளர் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |
| (ii) ஓய்வுபெற்றுச் சென்ற மற்றும் இடம் மாற்றலாகிச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படாது காணப்படுகின்ற கடன் மீதி ரூபா 39,388 ஆகும். | அறவிடப்படாது காணப்படுகின்ற காணப்படுகின்ற ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அதில் ஒரு உத்தியோகத்தர் ஓய்வுபெற்றுச் சென்றதுடன் எதிர்காலத்தில் இந்த பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 கையேற்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதி அமைச்சு மற்றும் மாகாண சபையில் இருந்து 1993 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளின் போது பிரதேச சபைக்கு கிடைத்த 04 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் உரித்து கையேற்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் உரித்தை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

#### 3.4.2 வாகனங்களின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 08 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் வருடாந்த வருமான அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளாமல் 2019 ஆம் ஆண்டின் போது ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | சபைக்குச் சொந்தமான சகல வாகனங்களுக்காகவும் வருமான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வருமான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

## 3.5 பெறுகைகள்

### 3.5.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு ஆண்டுகளுக்காகவும் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | கடந்த ஆண்டின் போது கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்ட பின்னர் 2020 ஆம் ஆண்டிற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |

### 3.5.2 வழங்கல் மற்றும் சேவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கலாசார நிலையத்திற்காக ஒலிபரப்பி முறைமையொன்றை கொள்வனவு செயயும் போது அரசாங்கத்தின் பெறுகை நடைமுறைகளுக்கு புறம்பாக கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், பின்னர் போலியான ஆவணங்கள் கோவைகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாமல் இருப்பதற்கு கண்காணிக்கப்படும் என அறியத்தருகின்றோம். |